# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்)
## (திருத்தம்)

**2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்)**
**சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*நீதி அமைச்சர் அவர்களால் 2018, ஏப்பிறல் மாதம் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, மாச்சு மாதம் 14 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **238 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

*__வாசகம் 2:__ இவ்வாசகமானது அனுகூலம் குறைந்த ஆள் எந்தக் காலப்பகுதியினுள் இச்சட்டத்தின் நன்மைகளை துய்ப்பதற்கு உரித்துடையவராகின்றாரோ அந்தக் காலப்பகுதியினை நீடிப்பதற்கென 2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினை திருத்துகின்றது.*

**காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்)**
**(திருத்தம்)**

ச.வ.- ஓ. 39/2017

**2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டின் 5 ஆம் இலக்க, காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) "இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர் இரண்டு வருடங்களினுள்'' என்னும் சொற்களுக்கு பதிலாக "இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து நான்கு வருடங்களினுள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.";

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில் "இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியின் பின்னர் இரண்டு வருடங்களினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து நான்கு வருடங்களினுள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.".

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.